## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.

## C.C.No. 213 /2019

2026 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 12 ஆம் நாள் புதன் கிழமை அரசு தரப்பு சாட்சி–03, திரு.துரைராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.துரைராஜ் | வயது | : | 54/26 |
| த.பெ. | : | சாமிநாதன் | தொழில் | : | கூலி |
| ஊர் | : | சாத்தம்பாடி | நிலை | : | LW05 / PW03 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

( எதிரிகள் ஆஜர் )

**முதல் விசாரணை:**

நான் தற்போது சாத்தம்பாடியில் வசித்து, கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள சாட்சி கையொப்பங்களில் என்னுடைய கையொப்பம் எதுவும் இல்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரிகளைத் தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 12.07.2018 ம் தேதி மாலை, நானும் சேகர் என்பவரும் எங்கள் ஊர் முட்டுவாஞ்சேரி செல்லும்

தார் ரோட்டில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, விக்கிரமங்கலம் போலீசார் அங்கு வந்து, சிவமுதலியின் கொல்லையில் நின்று விசாரித்து படம் வரைந்து, எழுதிக்கொண்டார்கள் என்றும், அவர்கள் எழுதிக்கொண்ட பேப்பரில் நானும் சேகர் என்பவரும் சாட்சி கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகள் என் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களை இந்த வழக்கிலிருந்து விடுவிக்க வேண்டும் என்பதற்காக, பார்வை மகசரில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை என்று எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை** – இல்லை

**மறு விசாரணை – இல்லை**

உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.